197406

குழந்தை வளர்ப்பின் இரகசியம்

[பி. அலெக்சாண்டிரோவ்]

குழந்தைகளின் குணமும் பழக்க வழக்கங்களும் அவற்றின் கனவுகளும் ஆசைகளும் வீட்டில் அவை எவ்வாறு வளர்க்கப்படுகின்றன என்பதையே பொறுத்திருக்கின்றன.

குழந்தை அதைச் சுற்றிலும் என்ன நடைபெறுகிறதென்பதை ஆவலுடன் கவனிக்கிறது. தனது உறவினர்களின் நடத்தையையும், எந்தக் காரியங்களை அவர்கள் ஆமோதிக்கிறார்கள், எவற்றைக் கண்டிக்கிறார்கள் என்பதையும் கருத்துடன் ஆராய்கிறது. எனவேதான் குழந்தைகளின் எதிர்காலம் குறித்துப் பெற்றோர்களும், வயது வந்தவர்கள் யாவருமே, மிகப்பெரும் பொறுப்பை ஏற்க வேண்டியிருக்கிறது. எனவேதான் அவர்கள் தமது நடத்தை சம்பந்தமாக மிகவும் கறாராய் இருக்கவேண்டியுள்ளது. வேலையைச் சரிவர செய்வதிலும், என் கடமையை நிறைவேற்றுவதிலும், நேர்மையிலும், வாய்மையிலும், பிறருடன் சாமர்த்தியமாகவும் அனுதாபத்துடன் நடந்து கொள்வதிலும் நான் என் குழந்தைகளுக்கு முன்னுதாரணமாகத் திகழும் முறையில் நடந்து கொள்கிறேனா? என்று அடிக்கடி நாம் ஆராய்ந்து பார்த்துக்கொள்வது அவசியமாகும்.

…………அனஸ்தாசியா நிகொலயெவ்னா தன்னந்தனியாக வாழ்கிறாள். அவள் கணவர் போர்முனையிலே இறந்துவிட்டார். அவளுடைய புதல்வர்கள் இருவரும் வயதாகிச் சொந்த ஊரை விட்டு நெடுந்தூரம் சென்று வேலை செய்கிறார்கள். பக்கத்து வீட்டிலுள்ள மரியா பெட்ரோவ்னா ஒரு நாள் அவளைச் சந்திக்க வந்தபோது அவள் உடல் நலமின்றிக் கஷ்டப்படுவதைக் கண்டாள். மரியா பெட்ரோவ்னா வீட்டிற்குத் திரும்பியதும் அவளுடைய மகனிடம் கூறினாள்: "கிரிஷா, நாஸ்தியா அத்தைக்கு உடம்பு சுகமில்லை. நீ போய் அவளுக்குத் தண்ணீர் கொண்டுவந்து கொடு; பசு மாட்டிற்கும் பன்றிகளுக்கும் தீனி போட்டுவிட்டு வா."

அந்தச் சிறுவன் அவனுடைய தாய் கூறியதை மனமுவந்து செய்தானா, இல்லையா என்பது முக்கியமல்ல., நம்மைச் சுற்றிலுமுள்ளோருக்கு நாம் உதவி புரிய வேண்டும், அவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்—இதை அந்தச் சிறுவன் அறிந்து கொள்வது அவசியம் என்பதே முக்கிய விஷயம்.

சுற்றிலுமுள்ளோரிடம் சாமர்த்தியமாகவும் அனுதாபத்துடனும் நடந்து கொள்ளும்படி குழந்தையை வளர்ப்பது எந்தக்

தாய்க்கும் அப்படி ஒன்றும் கடினமான காரியமல்ல. மமதையும் அகம்பாவமும் குழந்தைக்கு ஏற்படாதபடி அவள் கவனித்துக் கொள்ள வேண்டும். குழந்தையிடம் உள்ளவை யாவற்றையும் அது மனமுவந்து அதன் சகோதரர்கள், சகோதரிகளுடன் பகிர்ந்து கொள்வதற்குத் தாய் அதற்குக் கற்றுக் கொடுக்கவேண்டும். நண்பன் ஒருவன் சங்கடமான நிலையில் இருக்கும்போது அவனைச் சந்தித்து உதவி செய்யும்படி தாய் தனது சிறுவனை அனுப்பி வைக்க வேண்டும். திக்குவாய், கை கால்களில் குறைபாடுள்ள சிறுவர்களைக் கண்டு தன் குழந்தை கேலி செய்வதற்குத் தாய் இடம் தரக்கூடாது. இவ்விதம் படிப்படியாக குழந்தை சாமர்த்தியமும் அன்பு உள்ளமும் படைத்த ஆணாகவோ, பெண்ணாகவோ வளர வேண்டும்.

பெண்கள் அடிக்கடி ஒன்றுகூடி ஊர் வம்பு பேசுவார்கள் தமக்கு அருகே சிறுவர், சிறுமியர் இருப்பதை அவர்கள் அறவே மறந்து விடுவார்கள். அவர்கள் இவ்வாறு பேசுவது குழந்தைகளின் காதில் விழுமே என்ற யோசனை இல்லாமலே பேசிக்கொண்டிருப்பார்கள். வீட்டிலே பெற்றோர்கள் யாரைப் பற்றியாவது கேவலமாய்ப் பேசுவதைக் கேட்கும் குழந்தை, அவரிடம் மரியாதைக் குறைவாக நடந்து கொள்வதில் ஆச்சரியமில்லை.

மூத்தவர்களை மதித்து நடக்க வேண்டும். அவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும் என்பதைப் பெற்றோர்கள் தமது குழந்தைகளுக்குச் சிறு வயதிலிருந்தே உணர்த்துவது அவசியம். வயதானவர்களிடம் குழந்தைகள் மரியாதை குறைவாக நடந்து கொள்வதற்குப் பெற்றோர்கள் இடம் தரக்கூடாது. பெரியவர்களுக்குப் பணிவு காட்டுவதற்கும், வயதானவர்களுக்குச் சினிமா கொட்டகைகளிலும் ஊர்வலங்களிலும் தமது இடங்களை விட்டுக் கொடுப்பதற்கும், "க்யூ" வரிசையில் வயதானவர்களைத் தாண்டிச் சென்று முதல் இடத்தில் நிற்க முயலாமல் இருப்பதற்கும், தள்ளாதவர்கள் பளுவான பொருள்களை எடுத்துச் செல்லும்போது அவர்களுக்கு உதவி செய்வதற்கும் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுக்கத் தொடங்கினால், கட்டாயம் எல்லோரிடத்திலும் குழந்தைகள் பணிவுடனும் இனிமையாகவும் நடந்துகொள்ளும் என்பதில் ஐயமில்லை.

தாய் பாசத்தால் கண்ணிழந்து குழந்தைகளுக்கு அடிமைகளாகி விடுவதற்கு எந்தத் தாயும் இடம் தரக்கூடாது.

உதாரணமாக பிரயோஜெரோவ்னா கலனோவாவை எடுத்துக் கொள்வோம். அவள் மூன்று குழந்தைகளை வளர்த்து வருகிறாள். தனக்கு வேலை முடிந்து வீட்டிற்கு வருவதற்குள் அறையைச் சுத்தம் செய்யுமாறும், சாப்பாட்டு ஏனங்களைக் கழுவுமாறும், சாப்

பாட்டைச் சுடவைக்குமாறும், தண்ணீரைக் கொதிக்க வைக்குமாறும் அவள் தன் குழந்தைகளுக்கு வேலையிட்டுவிட்டுச் செல்கிறாள். தான் கூறும் எல்லா வேலைகளையும் செய்யும்படி அவள் தன் குழந்தைகளுக்குப் போதிக்கிறாள். இதன் மூலம் அந்தத் தாய் தன் குழந்தைகள் தன்னிடமும் வயதில் மூத்தவர்கள் யாவரிடமும் சாமர்த்தியமாகவும் பணிவுடனும் கருத்துடனும் நடந்துகொள்ளும்படிச் செய்கிறாள்.

வீட்டிலே குழந்தைகள் சரிவர வளர்க்கப்படுகிறார்களா என்பது தாயாரின் கல்வியையோ, பள்ளியில் தாயார் எத்தனை ஆண்டுகள் கல்வி பயின்றார் என்பதையோ பொறுத்திருக்கவில்லை.

நடைமுறையில் கையாளப்பட்டு நக்க பயன் தந்துள்ள சிறந்த விதி ஒன்று இருக்கிறது. இந்த விதியை அனுசரித்தால் கட்டாயம் குழந்தைகள் நல்லமுறையில் வளருவார்கள். குழந்தைகள்பால் மிகவும் கறாராக இருப்பதுடன், அவர்களை மதித்து நடக்க வேண்டும் என்பதே இந்த விதி. இதன் பொருள் என்ன? பெற்றோர்கள் கண்டிப்பாகவும் கறாராகவும் இருக்க வேண்டும். அதே சமயத்தில் அவர்கள் குழந்தையின் தேவைகளையும் கருத்துக்களையும் உன்னிப்பாகக் கவனித்து ஆவன செய்யவேண்டும் குழந்தையினிடம் நல்ல பழக்கங்களைப் பலாத்காரத்தின் மூலம் வேரூன்றச் செய்துவிட முடியாது—இதை நாம் மறக்கலாகாது. அதட்டலும் அடியும் குழந்தையின் உள்ளத்தைத் திருத்திவிடாது.

குழந்தையை அதட்டி ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும்படிச் செய்தால், மறுமுறை இரு மடங்கு உக்கிரத்துடன் அதட்ட வேண்டியிருக்கும். வசை மொழிகளின் சக்தி நாளுக்கு நாள் குறைந்துவிடும். ஆதலால் திட்டு, கூச்சல், அடி, உதை இவை போன்ற முறைகளைக் கையாளுவது நல்லதல்ல. சீக்கிரத்தில் இவை பலனற்றதாகிவிடும். தவிரவும் இவை குழந்தைகள் மனதில் கசப்பை உண்டாக்கிவிடும்,

தாயும் தந்தையும் போன்ற நெருங்கிய உறவினர்கள் கெட்ட சொற்களை உபயோகிப்பதைக் கேட்கும் குழந்தைகள் தாமும் அவற்றை உபயோகிக்கத் தொடங்குவதில் ஆச்சரியம் இல்லையல்லவா?

பெற்றோர்கள் கண்டிப்புடன் இருக்க வேண்டும் என்றால், முரட்டுத்தனமாக நடந்துகொள்வது என்று அர்த்தமல்ல. அடிக்கடி வைவதாலும், அடித்துப் பயமுறுத்துவதாலும், ஒவ்வொரு சிறு பிழைக்காகவும் தண்டிப்பதாலும், தீங்கே உண்டாகும். இவை குழந்தைகளிடம் குரோத மனப்பான்மையையே உண்டாக்குகின்றன. இதுபோன்ற முறைகளைக் கையாளுவோரின் குழந்தைகள்,

வீட்டில் மிகவும் அடக்கத்துடனும், பதவிசாகவும், நடந்துகொள்வதாக பாசாங்கு செய்துவிட்டு, வெளியே வந்ததும், பள்ளிக்கூடத்திலும் பொது இடங்களிலும் முரட்டுத்தனமாகவும் ஒழுங்கீனமாகவும் நடந்து கொள்ளும்.

தம் குழந்தைகள் போற்றத்தக்க சிறந்த பிரஜைகளாக வளர வேண்டுமென விரும்புவோர், குழந்தைகளிடம் கண்டிப்புடன் அவர்களைத் தக்கபடி மதித்து நடப்பதும் அவசியமாகும். சுத்தமாயிருத்தல், சிக்கனம், வீட்டிலுள்ளவர்களுக்கு உதவி செய்வது, மூத்தவர்களிடமும் தோழர்களிடமும் சாமர்த்தியமாகப் பழகுவது, பாடங்களைச் சரிவர படிப்பது-இவை யாவற்றையும் ஆரம்பம் முதற்கொண்டே குழந்தைகளுக்குத் தினசரிகற்றுக் கொடுக்கவேண்டும். தாய் அல்லது தந்தை குழந்தையிடம் பின்வருமாறு கூறவேண்டும் "உன்னை நான் நேசிக்கிறேன், மதிக்கிறேன்; உன்னிடம் அன்பு செலுத்துகிறேன். எனவேதான் நீ நெறி தவறாது இருக்கவேண்டும், சரிவர படிக்க வேண்டும், பாடுபட்டு உழைக்க வேண்டும், மூத்தவர்களுக்கு மரியாதை செலுத்தவேண்டும், உன் நற்பெயரை —சோவியத் பிரஜையின் நற்பெயரை—உன் குடும்பத்தின் நற்பெயரை—கண்ணின் கருமணியெனக் காக்க வேண்டும் என்று நான் கோருகிறேன்" பெற்றோர்களின் பாசமும் கண்டிப்பான கோரிக்கைகளும் ஒருங்கே சேர்ந்திருக்க வேண்டும்; சிறந்த முறையில் குழந்தைகளை வளர்த்தெடுப்பதின் இரகசியம் இதுவே.

—சோவியத் நாடு.

தமிழ்—ஆங்கிலம்
காந்தீய—சர்வோதய
இலக்கியத்திற்கும்,

"சர்வோதயம்"

தமிழ் — ஆங்கில பத்திரிகைகளுக்கும்

சர்வோதய பிரசுராலயம்,
தஞ்சாவூர்.

நாம் ஏன் சீனா, ஜப்பான் விவசாய முறையைப் பின்பற்ற வேண்டும்

[சி. சுந்தரராஜன், B.Sc. (Ag.), விவசாய வளர்ச்சி அதிகாரி, திருவண்ணாமலை.]

நமது நாட்டில் மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிக் கொண்டே போகிறது. ஆனால் உணவு உற்பத்தியோ அதற்குத் தகுந்த வேகத்தில் முன்னேறவில்லை. நமது முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிந்தது, அஸ்திவாரம் அதன்மேல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாகி ஒரு வருடமாகப் போகிறது. உணவு உற்பத்திப் பெருக்கத் துறையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதிக் காலத்திற்குள் நாம் நாற்பது சதவீதம் அதிகரிக்க வேண்டுமாயின், நமக்குப் பொருத்தமான பின்பற்றக் கூடிய நாடுகள் சீனாவும் ஜப்பானும்தான் சீரிய விவசாய முறையை நமக்கு அளித்திருக்கிறது. அது என்னவெனில், சீனாவின் கூட்டுறவுப் பண்ணைகளும், ஜப்பானின் சிறந்த விவசாய முறையும்தான். சைனாவானது நமது நாட்டைப் போல் இரண்டு பங்கு அதிகமான நிலப்பரப்பும், ஒன்றரைப் பங்கு அதிகமான ஜனத்தொகையும் கொண்டது. நமது நாட்டில் 302 மிலியன் ஏக்கர் இருக்கிறது. ஆனால் சைனாவில் 275 மிலியன் ஏகர்தான் இருக்கிறது. ஆகவே சைனாவில் பயிரிடக்கூடிய நிலத்தின் அளவு, நம்மைக்காட்டிலும் குறைவாக இருந்தாலும்கூட இரண்டு போகம் அல்லது மூன்று போகம் பயிரிடக்கூடிய நிலங்கள் அதிகம். சைனாவானது முந்திய யுத்தத்தால் பாதிக்கப்பட்டாலும்கூட அவர்கள் சிறந்த விவசாயிகளாதலால், பயிரிடக்கூடிய நிலத்தின் விஸ்தீரணம், தண்ணீர் பாய்ச்சப்படும் விஸ்தீரணம் உணவு உற்பத்திப் பெருக்கம் ஆகிய துறைகளில் பல மடங்கு முன்னேறியிருக்கிறது. அத்துடன் அரிசி சம்பந்தப்பட்ட மட்டில் அவர்கள், பருத்த கடினமான அரிசி ரகங்களைப் பயிரிடுவதால் மாகூல் அதிக அளவு கிடைக்கிறது. ஆனால் நாமோ கிச்லிலிசம்பா போன்ற (G. E. B-24) ரக நெல்லை அதிகமாக பயிரிட்டாலும் மாகூல் சுமாராகத்தான் கிடைக்கும். கூட்டுறவு இயக்கம்தான் விவசாயத்தின் அடிப்படையாக சைனாவில் தற்போது இருக்கிறது. முதலாவதாக விவசாயக் கடன் வசதி அளிக்கும் கூட்டுறவு முறை (Agricultural Credit Co-operative) ஆகும்: இரண்டாவதாக கொடுத்தல், விற்பனைக்கூட்டுறவு முறை (Supply and Marketing Co-operative) யாகும். மூன்றாவது விவசாயக் கூட்டுறவுப் பண்ணைகள். ஆகவே இம்மூன்றும் ஒன்றன்பின் ஒன்றாக

வளர வாய்ப்பு அளிக்க வேண்டும். இதற்கு நமது ஆச்சாரியா வினோபாவே அவர்கள் அருளிய பூதான முறை ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. நிலத்தைப் பயிரிடாமல் தரிசு போட்டிருப்பவர்களிடமிருந்து வாங்கி அதை நிலமற்ற ஏழைகளுக்கு வழங்க வேண்டும். சிறிய விவசாயிகளும் இவர்களும் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டும். இவ்விதம் நேருஜி அவர்கள் சொல்லிய பிரகாரம் சோஷலிஸ பாணியில் சமூகத்தை அமைக்க வேண்டும். ஆகவே இவ்விதமான சிறிய நிலச்சொந்தக்காரர்களைப் பின்னர் ஒன்று சேர்த்துக் கூட்டுறவுப் பண்ணைகள் சைனாவைப் போல நமது நாட்டிலும் அமைக்க நாம் முயல வேண்டும். இல்லாவிடில் அவர்களுக்கு வேண்டிய உழவு மாடுகள், நவீன கலப்பைகள் அரசாங்கத்தின் உதவி மூலம் கிடைக்க வாய்ப்பு இல்லாது போய்விடும். இதனால் உணவு உற்பத்தி பெருக வாய்ப்பு அதிகரிக்கிறது.

உழுகிறவனுக்கு நிலம் உரிமையாகிறதனால் அவனுக்குத் தனிப்பட்ட பொறுப்பு அதிகரிப்பதோடு, நாட்டின் மக்களுக்காக உணவு உற்பத்திப் பெருக்கம் அவனால் செய்ய முடிகிறது. ஆகையால் உன்னத பொறுப்பு வாய்ந்தவர்களை கூட்டுறவு முறையில் சேரும்படி செய்யவேண்டும். நமது நாட்டிலும் சைனாவைப்போன்று தொழிற்சாலைகள் பெருகிக்கொண்டே போவதால், நகர் மக்களுக்கு உணவு அதிகம் தேவைப்படுகிறது. ஆனால் இதைச் சிறிய விவசாயிகளிடமிருந்து நாம் சேகரிப்பதோ வாங்குவதோ கடினம். அதனால் கூட்டுறவுப் பண்ணைகள் அமைத்தால் சேகரிப்பு முறை சுலபம். மேலும் தனிப்பட்ட சிறியவிவசாயிகளினால் பயிர்த்திட்ட முறைகளை (crop-planning) அனுசரிக்க முடியாது. கூட்டுறவுப் பண்ணைகள் திட்டவட்டமான பயிர் முறைகளைக் கையாண்டு சீரிய பலனை அடையலாம். மேலும் ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பங்களையும் இதில் பயன்படுத்திக்கொள்ளலாம். இதனால் மனித சக்தியைத் திறமை, அளவுக்குத் தகுந்தபடி சந்தர்ப்பம் அளித்து ஆண் பெண் ஆகிய இருபாலார்க்கும் சம உரிமை கொடுத்துக், கூட்டுறவு முறையின் மூலம் நிர்வாகமும் அமைத்துக் கூட்டுறவுப் பண்ணைகளை நாமும் இங்கே ஏற்படுத்தவேண்டும்.

கூட்டுறவுப் பண்ணைகள் மூலம் மட்டிலும் நாம் ஒரு பத்து சத வீதம் அதிக உணவு உற்பத்தி செய்யமுடியும். மேலும் இதில் கடின உழைப்பு, நவீன முறைகள், நீர்ப்பாசன வசதி, செயற்கை உரங்கள் உபயோகித்தல், பொறுக்கு வித்து முதலியன அமையப் பெற்றால் இன்னும் ஒரு இருபது சத வீதம் உணவு உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. இதற்கு மேலும் சிறந்த விவசாய நிபுணர்களைத் தொழிலில் அமர்த்த வேண்டும். நாமோ

இங்கே அதற்குப் போதிய வாய்ப்பு அளிக்காதது மிகுந்த வருந்தத்தக்க விஷயம். மேலும் விவசாய விஸ்தரிப்பு ஆராய்ச்சிக் கூடத்திலிருந்து நிலத்திற்கு உடனே பரவுவதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும். விவசாயிகளின் தோழனாக விவசாய வளர்ச்சி அலுவலர்கள் இதில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும். இதற்கு நாம் நமது கிராம சேவக்குகளை உபயோகப்படுத்திக்கொள்ளலாம். மேலும் தொழிற் கல்வி பரவி ஒவ்வொரு படித்தவனுக்கும் வேலை வாய்ப்பு அளிக்கவேண்டும். சைனாவில் பெண்கள் வேலை செய்வதில் சிறந்த சாமர்த்தியசாலிகள். நம் நாட்டுப் பெண்கள் இதைப் பின்பற்றவேண்டும். ஆகவே சைனாவில் மனித சக்தி, உழைப்பின் அருமை (Dignity of labour) பிரதானமாக விளங்குகிறது. ரஷ்யா போன்ற நாடுகள் யந்திரங்கள் மூலம்தான் விவசாயம் (Mechanisation of Agriculture) நடத்துகிறது. மேலும் சோஷலிஸ பாணியில் சமுதாயத்தை நாம் அமைக்க வேண்டுமாயின் குடும்பத் திட்டம் (family Planning) முதலில் அமைக்கவேண்டும். இல்லாவிடில் மக்கள் தொகை மலிந்துவிடும். மனித மலம், பசுந்தாளுரம் சிறந்த உரங்கள், இவை காணாவிடில் சூப்பர்பாஸ்பேட், அம்மோனியம் சல்பேட் போன்ற உரங்களைப் போடுவது நல்லது. வரிசையாக விதைத்தல், அடிக்கடி களை எடுத்து வெட்டிக் கொடுத்தல் ஒரு சீரிய முறை. ஆகவே நம் விவசாயிகள் இத்துறையில் சீன தேசத்தை உடனடியாகப் பின்பற்றவேண்டும். இங்கே உள்ள கிராமங்களில் மனித மலத்தைக் கையால் எடுப்பது, இறைக்கொடுப்பது போன்றவைகளை மக்கள் செய்யமாட்டார்கள். அதனால் வேறு கருவிகள் மூலம் நாம் அதைச் செய்யலாம்.

மேலும் உற்பத்திப் பொருள்களின் நிரந்தர விலை, விற்பனை, பாதுகாப்பு (Guaranteed price marketing and crop insurance) போன்ற முறைகள் நம் நாட்டில் ஏற்படுத்த வேண்டும்.

மேலும் ஆதார விவசாயப் பள்ளிக்கூடங்கள், விவசாயக் கல்லூரிகள் நிறைய ஏற்படுத்த வேண்டும். சைனாவில் தொழில் முறை சீரிய நிலையில் இருக்கிறது. நாமும் இங்கே அதைப்போன்று அமைக்க வேண்டும். சீரைத் தேடின் ஏரைத்தேடு "Go back to Land" என்ற முதுமொழிக்கிணங்கப் படித்தவர்கள் கிராமங்களுக்குச் சென்று ஏழை விவசாயிகளின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த வழிசெய்ய வேண்டும். ஆகவே குறைந்தது ஒவ்வொரு தேசிய விஸ்தரிப்புத் திட்டப் பிராந்தியங்களிலும் ஒரு கூட்டுறவுப் பண்ணையாவது முதலில் அமைக்க முயலவேண்டும். ஆகவே கூட்டுறவுப் பண்ணைகள் திறம்பட வேலைசெய்ய வேண்டுமானால் ஒவ்வொரு அங்கத்தினர்களும் நன்றாக உழைத்துப் பண்ணையின் விளைவை அதிகரிக்கச்செய்ய வேண்டும். நிலத்திலிருந்து கிடைக்

கும் வருவாயை நியாயமான முறையிலும், சீரான முறையிலும் அங்கத்தினர்கள் பங்கிட்டுக்கொள்ள வேண்டும். மேலும் மிக முக்கியமானது சங்கத்தின் அலுவல்களைச் சரிவர நடத்துவதற்குத்தக்க தலைவரைக் கண்டுபிடிக்க வேண்டும். கூட்டுறவுப் பண்ணைகள் உற்பத்திப் பெருக்கம் அளிக்கின்றன. பின்னர் ஊதியப்பங்கீடு "உழைப்பிற்குத் தகுந்த ஊதியம்" என்ற கொள்கையைப் பின்பற்றிச் செய்ய வேண்டும். ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கொடுக்கப்படும் ஊதியமானது, அந்த நபரின் வேலைத்திறன். நிலத்தின்தரம், அவரால் கொடுக்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை அவர் அளித்த கருவிகளின் தன்மை இந் நான்கைப் பொருத்ததாக இருக்க வேண்டும். "சம அந்தஸ்து" "பரஸ்பர உதவி" இவ்விரண்டுமே கூட்டுறவுச் சங்கங்களின் அடிப்படை. அங்கத்தினராவதற்கு வலுக்கட்டாயம் கூடாது. எல்லோருக்கும் சம உரிமையும், பங்கும் இருக்க வேண்டும். ஆகவே கூட்டுறவுப் பண்ணைகள் ஆரம்பிப்பதற்குக், குறுகிய கால உற்பத்தித் திட்டம் வரவு செலவுத் திட்டம், சங்கத் தலைவர்கள் தேர்ந்தெடுத்தல், விவசாய வல்லுநர், சங்கக் கணக்கு முதலியன செய்ய வேண்டும். சங்கத் தலைவர்களிடம் பெருந் தன்மை, அழுக்காறின்மை, பொது நல சேவை, உழைக்கும் ஆற்றல் ஆகிய நற்குணங்கள் பொருந்தி இருக்கவேண்டும்.

நம் நாடு சைனாவைப்போல் கூட்டுறவுப் பண்ணைகள் அமைக்க வேண்டும். இந்தியாவும் விவசாயிகள் 70 சத விதம் கொண்டது சைனாவைப்போல். ஆகவே ஏழைக் குடியானவர்களையும் நடுத்தர விவசாயிகளையும் அங்கத்தினர்களாகச் சேர்த்த கூட்டுறவுப் பண்ணைகள் ஏற்படுத்த வேண்டும். கூட்டுறவுப் பண்ணைகள் நவீன முறையைக் கையாண்டு உணவு உற்பத்தியைப் பெருக்க ஒரு சிறந்த சாதனமாகும். ஆகவே ஜனநாயகம் வளர கூட்டுறவுப் பண்ணைகள் ஒன்றுதான் சாந்தி அளிக்கும்.

இரண்டாவதாக ஜப்பான் தேசத்தை எடுத்துக்கொண்டால் அவர்கள் சிறந்த விவசாயிகள். உழைப்பின் ஊதியம், சாமர்த்தியம் கொண்டவர்கள். அங்கேயும் நிலத்தின் பரப்பு குறைவு. ஆனால் ஜனத்தொகை அதிகம். ஆனால் உணவு உற்பத்தி அதிகம். அது எப்படி என்றால் அவர்கள் குப்பையை மாணிக்கம் ஆகக் கருதுகிறார்கள். மனித மலம் ஒரு சிறந்த எருவாக உபயோகப்படுத்தப்படுகிறது. ஒருவன் ஒரு தடவை மலம் இருந்தால் அதற்குப் பிரதி உபகாரமாக அங்கேயே ஒரு கப் தேத்தண்ணீர் கொடுத்து அந்தக் கழிவை எடுத்துக்கொள்கிறார்கள். ஜப்பானில் விவசாயம் ஒரு தோட்டக்கலை போன்றது. ஒவ்வொரு நெல் செடியும் தனியாகக் கவனிக்கப்படுகிறது. அதனுடைய அன்றாட மாற்றம் தொடர்ச்சி

யாகக் கவனிக்கப்பட்டு சீரிய மகசூல் அடைகிறார்கள். அது எப்படி என்பதைக் காண்போம். முதலில் நாற்றங்கால் அளக்கப்பட்டு, மேட்டு நாற்றங்கால் வடிகால் வசதியுடன் 10 செண்டு சீரிய முறையில் பக்குவப்படுத்தப்பட வேண்டும். நிலம் குறைந்தது ஆறு தடவைகளாவது உழப்பட வேண்டும். நாற்றங்காலில் ஒவ்வொரு பாத்தியும் நான்கு அடி அகலம் தான் இருக்கவேண்டும். மேலும் நன்றாக மக்கிய எரு, கம்போஸ்ட் எரு முதலியவற்றை நன்றாக மண்ணுடன் கலக்க வேண்டும். அம்மோனியம் சல்பேட், சூப்பர்பாஸ்பேட் உரங்களை நன்றாகக் கரைத்துத் தெளிக்க வேண்டும். மண்ணை மிருதுவாக்கிக் கொஞ்சம் சாம்பலையும் கலக்கவேண்டும். இரண்டாவதாக பொறுக்குவிதை 10 படி அல்லது 25 பவுண்டு எடுத்து உப்புத் தண்ணீர் கரைசல் உள்ள வாளியில் அதைக் கொட்ட வேண்டும். மோசமான விதைகள் மேலே வரும். அவைகளை நீக்கி விடவேண்டும். பிறகு கனத்த விதைகளை எடுத்து அக்ரசான் 1 அவுன்ஸ் கலந்தால் தூர் அழுகல் போன்ற பூசண நோய்கள் நெல் பயிரைத் தாக்காது. பின்னர் நாற்றங்காலில் விதையை விதைத்து விடலாம்.

நடவேண்டிய நிலத்தில் செய்யவேண்டியது என்னவென்றால் முந்திய அறுவடைக்குப் பின்னர் நிலத்தை நன்றாக உழுது செஸ்பேனியா, சணப்பு போன்ற பசுந்தாளுரப் பயிர்கள் விதைக்க வேண்டும், வயல்களில் வரப்புகளைப் பத்திரமாக கவனிக்கவேண்டும். எலி, நண்டு இவற்றால் ஏற்படுத்தப்பட்ட பொந்துகளை அடைக்கவேண்டும், ஒரு ஏக்கருக்கு 20 வண்டி மாட்டு எரு அல்லது கம்போஸ்ட் போடலாம். 150 பவுண்டு சூப்பர் கடைசி உழவில் போடவேண்டும். பசுந்தாளுரம் 6,000 பவுண்டு போட்டு "பர்மீஸ் செட்டன்" போன்ற கருவிகளால் தழையையும் சேற்றையும் நன்றாகக் கலக்க வேண்டும். நாற்றுக்கள் நன்றாக வளர்ந்த பின் வேர்களைச் சேதப்படுத்தாமல் பிடுங்கி 10 அங்குல இடைவெளிவிட்டு, வரிசையில் 6 அங்குலத்துக்கு இரண்டு அல்லது மூன்று நாற்றுக்களாக நடவேண்டும். வரிசையாக நடுவதற்கு, கயிறுகள் அடையாளம் செய்யப்பட்டு இடை இடையே முடிச்சுகள் போட்டு வைக்கவேண்டும். நட்டு இரண்டு வாரத்திற்குப் பிறகு களை பிடுங்கவேண்டும். நட்டு ஒரு மாதத்திற்கு பின்னர் 75 பவுண்டும், ஆறு வாரத்திற்குப்பின் 75 பவுண்டும் ஆக அம்மோனியம் சல்பேட் போடவேண்டும். களை எடுத்து இடையே உழுது கொடுப்பதற்கு "ஜெயவீடர்" போன்ற இடை உழவுக் கருவிகள் (Intercultivators) உபயோகிக்கவேண்டும். இதனால் இனவிருத்தி அதிகப்பட்டுப் பயிர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. வேர்கள் கொஞ்சம் வெட்டப்படுவதால் செடிகள் பலமடைந்து, சுவாசிக்கும்

திறமை அதிகரிக்கப்படுகிறது. ஒரு ஜெயவீடரின் விலை. ரூ. 10 முதல் 15 தான்.

பின்னர் பயிரில் பூச்சிகளோ நோய்களோ தென்பட்டால் பூச்சி மருந்துகள், நோய்க்கு மருந்துகள் போட்டு நிவர்த்திக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு இதனால் ஏற்படும் செலவு ரூபாய் ஐந்துதான். ஆகவே ஜப்பானிய முறையில் பண்படுத்தப்பட்ட நிலம், குறைந்த விதை அளவு, பொறுக்குவிதை (improved seed), உப்புத் தண்ணீரில் போட்டு மோசமான விதையை நீக்குதல், விதையுடன் அக்ரசான் கலத்தல், நல்ல நாற்றங்கால், நாற்றங்காலுக்கு உரமிடுதல், வரிசையாக நடுதல் (line planting) வயலுக்கு உரமிடுதல் (intensive manuring), இடை உழவு செய்தல் (interculturing), பூச்சி பூஞ்சாண நோய்களைத் தகுந்த காலத்தில் தடுத்தல் (pests and diseases control) அடிக்கடி களை எடுத்தல் போன்ற முறைகளினால் நாம் நெல் பயிரிட்டால் வளரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியைப் பெருக்கி நம் திட்டங்களை நிறைவேற்றலாம்.

ஆரம்பம் :1927. போன் நெ. 61068.

சென்னை கூட்டுறவு பால் வழங்கும் கூட்டுச் சங்கம்,

(அளவிடப்பட்டது)

அயனாவரம், சென்னை–23.

திரு. K. நச்சினார்க்கினிய சிவம் அவர்கள். தலைவர்,

1927ம் ஆண்டு முதற் கொண்டு சென்னை வாசிகளுக்கு நல்ல பால் பாஸ் சுரைஸ்ட் முறையில் சுத்தம் செய்த பால். (வியாதிக்கிருமிகளை மட்டும் நீக்கியது) மக்களின் உடல் நலத்திற்காக சென்னையில் டிப்போக்கள் சைக்கிள் பியூன்கள் மூலம் தேவையான பால் வழங்கப்படுகிறது. ஓட்டல்கள், கான்டீன்கள், மற்றபடி வைபவங்களுக்கும் பால் வழங்கப்படுகிறது.

விலை விபரம்

பால் 1 படி (டிப்போக்கள்)	ரு 1	20	
„ 1 ஆழாக்கு	0	15	நயா பைசா
„ 1 படி ஓட்டல்கள், மாணவ விடுதிகள், கேன்டீன்கள்	1	28	„
„ „ ஸ்பெஷல் ஆர்டர்	1	38	„
நெய் 1 வீசை	7	60	„
கோவா இனிப்பு 1 வீசை	6	00	„
கோவா இனிப்பற்றது 1 வீசை	6	50	„

(வீடுகளில் வழங்க மாதம் 1க்கு ரு 2. சர்வீஸ் சார்ஜூ பிரத்தியேகம்)

மு. அருளானந்தம், B.Com (Hons)

செயலாளர்.

முத்தமிழ்க் கலைஞர்களுக்குப் பாராட்டு

பண்டைத் தண்டமிழ்ச் செல்வங்களையும்' பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக் கோடுங் கொடுங்கடல் கொண்டபின்பு, பாண்டியன் முடத்திருமாறன் மதுரையம்பதியில் கடைச் சங்கந் தோற்றுவித்து, புலவர் பெருமக்களனைவரையும் கூட்டிப் பாராட்டித் தமிழ் மொழியின் வளர்ச்சியில் தன்னாட்டத்தைச் செலுத்தியமையைப் போன்று ஆங்கில அரசினரின் அடிமைத் தளையில் மொழி வளமும், கலைவளமும் பின்னோக்கிச் சென்று கொண்டிருந்த நிலையில் உரிமை பெற்றபின் நம் அரசினர், உரிமைப் போராட்ட நூற்றாண்டு விழாவை ஒட்டித் தமிழகத்தின் தலைநகராம் சென்னையில் முத்தமிழ்க் களஞ்சியங்களாகிய திரு. மு. வரதராசனார், திருமதி. கே. பி. சுந்தராம்பாள், திரு. ப. சம்பந்தமுதலியார் முதலிய மூவரையும் கூட்டிப் பாராட்டியது, மிகவும் மகிழ்தற்குரியது. சென்னை அரசினர் இம்மூவரையும் ஒன்றுகூட்டிப் பரிசுகள் வழங்கியமை தமிழ் மொழியையும், தமிழக மக்களையும், தமிழ்நாட்டையும் பாராட்டியமைக்கொப்பாகும்.

முத்தமிழ் மணிகளாகிய திரு. வரதராசனாரும், திருமதி சுந்தராம்பாளும், திரு. சம்பந்த முதலியாரும் ஒரே நூற்றாண்டில் வாழ்ந்து நம் மொழியை முத்துறைகளிலும் வளர்த்து வரும் அருமையை நம் அரசினர் உணர்ந்து, அவர்களை ஒரே அவையில் கூட்டிப் பாராட்டி மகிழ் வித்தமை வள்ளுவரையும், ஒளவையாரையும், இளங்கோவடிகளையும் ஒரே அவையில் ஒன்று கூட்டிப் பாராட்டியமைக்கு ஒப்பாகும்.

இந் நிகழ்ச்சி ஆகஸ்டுத் திங்கள், 16 ஆம் நாள் இராஜாஜி மண்டபத்தில், முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. அஞ்ஞான்று, சென்னை கவர்னர் திரு. ஜான் முத்தமிழ் மணிகளுக்கும் அரசினர் சார்பில் பொற்பதக்கங்களை வழங்கினார். அவர் இப் பெருமக்கள் தமிழகத்தில் வாழ நாம் பெரும் பேறு செய்துள்ளோ மெனவும், முற்காலத்தில் தமிழ் மக்கள் கலையைப் போற்றி வந்தனர் எனவும், நாம் அடிமைப்பட்ட காலை அக் கலைகள் மங்கத்துவங்கின எனவும், அக் கலைகளைப் போற்றி வளர்க்கும் பெருமக்களைப் போற்ற வேண்டுவது நமது கடமை என்றும் கூறினார். அமைச்சர் திரு. சுப்பிரமணியம், "இவ் விழா தமிழக வரலாற்றில் இடம் பெற வேண்டிய முக்கிய நிகழ்ச்சியாகும்." எனக் கூறினார். செய்தித் துறை நெறியாளர் கலைஞர்களுக்கு அரசினர் அளித்துள்ள பாராட்டுகளைப் படித்தார்

உயர்நீதிபதி திரு. இராசமன்னார், "ஒரு நாட்டின் கலைஞர்களைப் பாராட்ட அந் நாடு முன்வருவதென்றால் அன்று முதல் அந் நாட்டின் பொற்காலம் ஆரம்பமாகிறது என்றுதான் பொருள்" எனக் கூறினார்,

டாக்டர் வரதராசனார்: இவர் நூல் நயம்போலும் பயிலும் பண்பும் அப்பண்புடன் நுண்ணிய நூல் நயத்தை நுண்மாண் நுழைபுல ஆய்வுண்ட அனைவரும் உணரும் வண்ணம் தெள்ளு தீந்தமிழில் இலக்கியச் சுவையுடனும் சிறந்த ஆய்வுத் திறனுடனும் எழுதும் ஆற்றல் படைத்த அறிஞர்.

தமிழகத்தில் தமிழ் நூல்களை மக்கள் விருப்புடன் விலை கொடுத்து வாங்கிப் படிக்கும் ஒரு பழக்கத்தை இவர் தமது எழுத்து நடையால் ஏற்படுத்தியவர். இவரது "கள்ளோ காவியமோ", "அரசியல் அலைகள்", "ஓவச் செய்தி", "மொழி இயற் கட்டுரைகள்" முதலியன அரசினரின் பரிசைப் பெற்றுள்ளனவாகும். சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதன் முதலாக ஆராய்ச்சி நூல் எழுதி டாக்டர் பட்டம் பெற்ற இவர் மொழி நூல் ஆராய்ச்சிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும், திறனாய்வுக் கலைக்கும் சிறந்த தொண்டாற்றியவர்.

திருமதி. சுந்தராம்பாள்: இசை, நடிப்பு, திரை உலகம் எனும் மூன்றிலும் சிறந்த புகழ் பெற்ற இவர், தேன் தமிழில் தீந்தமிழிசைக்கு ஆற்றியுள்ள தொண்டு அளவிடற்பாலதன்று. ஔவை போன்றே ஊர் ஊராய்ச் சென்று பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடி மக்களின் உள்ளத்தைத் தம் இசைமூலம் கவர்ந்து பேரிசையுற்ற பெருமூதாட்டி. எளிமையும், தூய்மையும், இணைந்து தெள்ளிய தீந்தமிழமுதின் சுவையை உணர்ந்து பிறரையும் உணருமாறு செய்து, இசையையே தமது வாழ்க்கைக் குறிக்கோளாகக் கொண்டவர்.

திரு. சம்பந்த முதலியார்: இவர் சிறந்த நாடகப் பேராசிரியர்; நடிப்பின் மெய்ப்பாடுகளை உணர்ந்து நடிக்கவல்ல சிறந்த நடிகர். "தெருக் கூத்து" என இகழப்பட்ட நிலையில் இருந்த கலையை நல்லதோர் அரங்கில் ஏற்றி, நாடக உலகிற்குப் புத்துயிர் ஊட்டி "சுகுண விலாச சபை"யைத் தோற்றுவித்த பெரும் சான்றோர் இவர். பிற நாட்டு அறிஞர் பெருமக்களின் நாடகங்களை நந்தமிழ் மொழியில் ஆக்கியுள்ளமைக்குத் தமிழகம் என்றும் நன்றியுடையது. படித்துப் பட்டம் பெற்ற இப்பெரியார் பாமரரும் சுவைக்கும்படியும், பட்டம் பெற்றோரும் நாடக உலகில் பங்கெடுத்து நடிக்கும்படியும் நாடக உலகில் ஒரு மறுமலர்ச்சி செய்த நாடகத் தந்தை ஆவர். இம் முத்தமிழ் மணிகளுக்கும் நமது வாழ்த்து உரித்தாகுக!

—செந்தமிழ்ச் செல்வி.

பழைய மாணவர் கடிதம்

திருச்சி
3—7—57.

அன்புடைய அண்ணா!

தங்கள் திருவடி பணிகின்றேன். நான் நம் இல்லத்தில் ஐந்தாண்டுகள் தொடர்ந்து படித்ததையும், நல்லொழுக்கமுடன் விளங்கினமையும் தாங்கள் நன்கறிவீர்கள். நான் தங்கள் ஆசீர்வாதத்தாலும் அன்புடைய அப்பா அவர்களின் எண்ணத்தாலும் இந்த யாண்டு ஏப்ரல் திங்களில் நடந்த பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில் பெரு வெற்றி பெற்றேன். திரு. இராஜவேல் முதலியார் அவர்கள் அடிக்கடி கூறிய "நிழலின் அருமை வெயிலுக்குச் சென்றால் தெரியும்" என்ற உண்மையை உணர்கின்றேன். நான் நிழலாகிய நம் பள்ளியில் படிக்குங்காலே அந்நிழலின் பெருமை உணர்ந்தவன். ஆகையால் வெயிலுக்கு வந்தவுடன் நிழலின் பெருமைதனை உணர்வதைவிட வெயிலின் கொடுமைதனையும் எண்ணுகிறேன். நான் நம் பள்ளியில் படிக்குங்கால் பெற்ற பரிசுகள் அன்றியும் உயர் பள்ளி வாழ்வில் ஒன்பது பரிசுகள் பெற்றுள்ளேன்.

பள்ளியிறுதி வகுப்பின் அரசாங்கத் தேர்வில் தமிழில் நானே பள்ளியில் முதன்மையாக மதிப்பெண்கள் பெற்றுள்ளேன். அதற்குரிய பரிசாகத் தருமை ஆதீனத்தார் அளிக்கும் தொண்ணூறு ரூபாய் மதிப்புடைய தங்கப் பதக்கத்தையும் பெறவிருக்கின்றேன். எங்குச் சென்றாலும் இந்துமதப் பள்ளியின் மணம் வீசுவது என் மனதில் நான் அப்பள்ளியின் மாணவன் என்ற கர்வத்தை வளர்க்கின்றது.

நான் நம் பள்ளியில் படித்தவன் என்பதனால் நம் பள்ளிக்கு என்றென்றும் கடப்பாடுடையவன். என் மதிப்பெண்களை கீழே தருகின்றேன். என் வாழ்வுப் பாதையைத் திறந்துவிடுவீர்கள் என எண்ணுகிறேன்—முழுதும் நம்புகிறேன்.

மதிப்பெண்கள்

பொதுத் தமிழ் 75%, சிறப்புத் தமிழ் 63%, ஆங்கிலம் 65%, இந்தி (விருப்பப் பாடம்) 62%, பொதுக் கணிதம் 84%, அறிவியல் 64%, சமூக அறிவு நூல் 66%.

கூடுதல் **600க்கு 417**

ஜெ. சந்திரசேகரன்
திருமதி பாப்பம்மாள் மாணவர் இல்லம்,
கீழச் சிந்தாமணி, திருச்சிராப்பள்ளி.

இயற்கை வருணனை

"ஞாயிறும் திங்களும்"

திரு. N. பனசை பாலன் அவர்கள்

பள்ளி இறுதி வகுப்பு 60, செட்டித் தெரு, மாயூரம்.

மரங்கள் மகிழ்வுடன் தலைவிரித்துப் பூத்துக் குலுங்கித் தாண்டவமாடும் வசந்த காலம். புள்ளினங்கள் புள்ளிமான்களின் பூரிப்புடனத்திற்குப் புனித இன்னிசை பாடும் நேரம்.

மலைகள் மிகவும் கம்பீரமாய்க் கவர்ச்சியோடு விளங்குகின்றன. மலைவாழ் மரங்கள் பன்னிறப் பூக்களைப் பூத்துப் பூரிக்கின்றன. மலையை மறித்துப் பளிங்கென ஓடையொன்று விரைகின்றது. அவ்வோடையில் வெள்ளென விளங்கும் மச்சங்கள் வயிரம் போற் பொலிகின்றன.

இக்காட்சிகளை எல்லாம் அப்போது உறங்கி எழுந்த உதய சூரியன் இரகசியமாய் மலைகளுக்குப் பின்னால் ஒலிந்து நின்று காண்கின்றான். பின்னர் இவ்வாறு இரகசியமாய் இருக்க மனம் ஒருப்படவில்லை.

பூரிப்படைந்த வானவன் முழுக்காட்சியையும் காணவிழைகிறான். எனவே வேகமாக வானைக் கிழித்துக் கொண்டு சுற்றிச் சுழலும் பொன்னிறத் தகட்டைப் போன்று சொலிக்கும் பொலிவுடன் வானவீதியில் பவனி வருகின்றான்!

அவனது வரவை ஆவலுடன் எதிர்பார்ப்பனபோல் மரங்கள் தங்களது இளந்தளிர்களையும் இனிய பூக்களையும் அசைக்கின்றன. புள்ளினங்கள் மகிழ்வுடன் இங்குமங்கும் பறந்து விளையாடுகின்றன.

ஓடையில் ஓடும்நீர் தங்க நீராகிறது. வானவீதியில் விரைந்த வெயிலவன் நடுவீதியை அடைகிறான். அவனையே முழு இன்பத்தையும் நுகரவிட மற்ற மேகங்களுக்குப் பொறுமை இல்லை. ஆம்! அவை இவனது பெருமிதங் குறித்துப் பொறாமைப்படுகின்றன. பொறாமைப்பட்டு இவனை அணுகித் தமது கரிய திரையினால் மறைத்து விடுகின்றன!

அந்தோ! இப்போது சூரியன் மேகத்தின் கருந்திரையாகிய பெருவலையில் வீழ்ந்து விட்டான். வீழ்ந்து வெளியேறத் துடி-

துடிக்கிறான்! முடியாது போகவே மனம் வெதும்புகிறான். வெகுநேரம் முற்றுகை இட்ட மேகங்கள் பொறாமையின் எல்லையைக் கடந்து அப்பால் செல்கின்றன. சூரியன் சூரனாய்த் தனது பொற்கிரணங்களைப் பார்மீது பரப்புகிறான். மாலை நேரம். ஆதவன் மேலடிவானில் காலடி வைக்கிறான்.

இன்னோசை எழுப்பும் எழிற்குயில் தண்ணென பூங்குழல் ஓசையை எழுப்ப வானளாவிய மருத மரத்தின் பசிய இலைக்கூட்டத்தினிடையில் இவர்ந்துள்ள பசிய கிள்ளைகள் மங்கலம்பாட, மதுவுண்ட வண்டுகள் இனிய ரீங்காரம் செய்ய, முட்கள் மிகுந்த பொன்னிறத் தாழை வாளாயுதத்தை ஏந்திக்கொண்டு நிற்க, இளவேனிலாம் இளங்கோமகன் மகுடம்சூடி மகிழ்ந்து நிற்கிறான்!

இவற்றையெல்லாம் கண்டு களி கொண்டவனாய் வட்டத் தட்டை யொத்த வானவன் திரும்பிச் செல்ல வருந்துபவனைப் போன்று மிகவும் மெதுவாக அடிவானை அடைகிறான். தழைந்தோங்கிய தருக்கள் சூரியன் மறைதலைக்கண்டு சோக நித்திரை புரிகின்றன.

இருள்தேவன் மெல்ல தனது கரிய போர்வையை விரிக்கிறான். அதோ! கீழடிவானில் சந்திரன் கும்மாளமிட்டுக் குதித்தெழுகின்றான். ஆம் என்ன தண்மை? என்ன தண்மை? அமுதமழையைத் தாரை தாரையாகப் பொழிகின்றான். விடியற் காலையில் விடிவெள்ளியை "வா, வா" என்றழைப்பதுபோல் சேவற்கோழிகள் இரவையும் மறந்து கூவுகின்றன.

சேற்றைச் சார்ந்த செந்தாமரை மலர்கள் தமது மெல்லிய சிவந்த முகங்களை மூடிக்கொண்டு மனத்தினுள்ளே வருந்துகின்றன, தங்கள் தலைவனைக் காணாமையினால் சென்னிற அல்லிகள் காதலனாகிய திங்களை வரவேற்கச் சிரித்த முகங்களுடன் காட்சியளிக்கின்றன.

திங்களைச் சுற்றிலும் வைரக்கற்கள் போன்றே கண் சிமிட்டும் தாரகைகள் ஒளிர்கின்றன. இரவை விரும்பும் பறவைகள் சாரி சாரியாய் அங்கும் இங்கும் பறக்கின்றன. ஓடைகளில் வெள்ளி நீர் ஓடுகின்றது.

பூஞ்சோலைகளில் முல்லை, மல்லிகை, முதலிய மலர்களும், அல்லி, செங்கழுநீர் ஆகியவையும், இருவாட்சி மலர்களும் தமது பற்களைத் திறந்து புன்னகை புரிகின்றன. பொன்னிறமானவும், கருநிறமானவும், மற்றும் பன்னிறமானவுமான தும்பிகள் அம்மலர்

களினூடே வீணையின் குரலினும் இனியகானம் புரிகின்றன. எங்கோ தூரத்தில் கடல்நீர், சந்திரன் வரவினால் பொங்கி அங்குமிங்கும் பெரிய அலைகளைப் பரப்புகின்றது. கடல் நடுவில் படகு ஒன்றில் மீகாமன் ஒருவன்... ... ...

"திங்களவன் பொங்கி வந்து
எங்கணுஞ் சென்றிடுவான்!
எங்களுடை நாட்டி லவன்
எங்கும் மகிழ்ந்திருப்பான்!
கோல மயில் போல பல
சோலைகளில் நின்று
காலமதை ஞாலந் தனில்
கடத்து வதைக் காணீர்!!... ....

எனப்பாடுகிறான். என்ன இனிமை! அவன் குரலில் மகிழ்ச்சி வெள்ளம் கரை புரண்டு ஓடுகின்றது. திங்களஞ் செல்வன் இவற்றை எல்லாம் கண்டு களிக்கிறான். வெள்ளித் தட்டை வான வீதியில் விட்டெறிந்தாற் போன்று கானகத்தூடே கனவேகமாய்க் கதிர் விடுகிறான்.

விடியற் காலம் சந்திரன் தனது வட்டமுகத்துடன் வட்டவானின் மேலடிமை வாட்டமுடன் தாவிப் பிடிக்கிறான். அதோ! அதோ—அதோ—அதோபோய் முடிவில் மறைந்தே விடுகிறான்.

அதோ ஓர் சேவற்கோழி—தனது கடமையில் வெற்றி காண்பது போல் களிப்புடன் கொக்கரிக்கின்றது. அதன் இனிய குரலைக் கேட்ட கருங்காகங்கள் தங்கள் கூடுகளை விட்டு வெளிவந்து "கா, கா" எனக்கரைகின்றன. இக்குரல்கள் மறைந்த கதிரவனை மீண்டும் அழைத்து வந்து நம்முன் நிறுத்தி விட்டன எனின் அக்குரல்களின் பெருமைதான் என்னே?

கதிரவன் தனது கடமையைச் செய்கிறான். புள்ளினங்கள் தங்கள் கடமையைக் களிப்புடன் செய்கின்றன. செய்து மக்களைத் தங்கள் கடமைகளைச் செய்ய ஊக்குகின்றன. நாமும் நம் நற்கடன்களை நாடோறும் நடாத்தி நலமுறுவோம்.

—குமரகுருபரன்.

கலைவாணர் மறைவு

முத்தமிழுள் ஒன்றாகிய நாடகத்துள் நகை என்னும் மெய்ப்பாட்டில் தலை சிறந்த கலைஞராய, தமிழக மக்களனைவரையும் மகிழ்வித்து, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, வள்ளன்மை முதலிய பெரும் பண்புகளுடன் வாழ்ந்து வந்த ஒப்பரிய கலைவாணர் திரு. என். எஸ். கிருட்டினன் ஆகஸ்டுத் திங்கள் முப்பதாம் நாள் காலை பதினொன்றரை மணிக்குச் சென்னைப் பொது மருத்துவ விடுதியில் ஈரல் நோயால் மிகவும் நலிவுற்றுக் காலமான செய்தி கேட்டு வருந்துகிறோம். அவர் பிரிவால் கலைஞருக்கும், நாட்டிற்கும் மொழிக்கும், மக்களுக்கும் ஏற்பட்ட நட்டம் ஈடு இணையற்றதாகும்.

நெல்லையில் சீர்த்தி நெல்லை வட்டத்தினை அடுத்த நாகர்கோவிலைச் சார்ந்த ஒழுகினசேரி எனும் கிராமத்தில் வேளாளர் குலத்தில் சுடலைமுத்து என்பவரின் மகனாகப் பிறந்து "தோன்றிற் புகழொடு தோன்றுக" எனும் தொன் மொழியைத் தமிழ் மக்களுக்கு வாழ்க்கை முறையில் வாழ்ந்து காட்டியவர், திரு. என். எஸ். கிருட்டினன். அவர் காட்சிக்கு எளியராக விளங்கினார்; மேலும், இவர் எள்ளல், இளமை, பேதைமை, மடமை என்னும் பண்புகள் மூலம்மட்டும் நகை என்னும் மெய்ப்பாட்டை உண்டாக்காது கருத்துக்கள் பொழிந்த நிலையில் கற்றாரும் கல்லாதவரும் மகிழும் வண்ணம் நகைச் சுவையை வளப்படுத்திய சிறந்த கலைஞர் ஆவர்; இந்தனார் கலை நிகழ்ச்சி, வில்லுப்பாட்டு முதலியவைகளின் மூலம் பாமர மக்களிடையிலும் பகுத்தறிவு வளத்தை ஊட்டிய பெருமை, இவரையே சாரும். அவர் வள்ளன்மையை நோக்குங்கால் பசிப்பிணி மருத்துவரென்றலும் சாலும். மேல் நாட்டில் விளங்கிய சிறந்த நகைச்சுவை நடிகர் "சார்லி சாப்ளின்" போன்று தமிழகத்தின் "சார்லி சாப்ளினா"க திரு. கிருட்டினன் விளங்கினார்.

அவர் தமது ஒப்பற்ற நகைச்சுவை மிக்க நடிப்புத் திறமையில் "கலைவாணர்" என மக்களால் போற்றப்பட்டவர். காந்தியடிகளாரிடம் கரைகடந்த அன்புடையவர் அவர். அப்பற்றின் அறிகுறியாக நாகர் கோவிலில் பெரியதொரு காந்தியாரின் நினைவுத்தூணை (தூபி) நாட்டி, காந்தியாரின் வரலாற்றை வில்லுப்பாட்டு மூலம் மக்களிடையே பரப்பி வந்தார். அவர் திருக்குறளைப் பயிலுவதிலும், அக் கொள்கைகளை மக்களிடையே பரப்புவதிலும் எல்லையற்ற ஈடுபாடுடையவர். எடுத்துக்காட்டாக இவர் தயாரித்து வெளியிட்ட "பணம்" என்ற திரைப்படத்தில் சை. சி. கழகத்தார் கையடக்க அளவில் வெளியிட்டுள்ள திருக்குறளை எடுத்து

மக்களுக்குக் காட்டி, "உலகமே இதில் அடங்கியுள்ளது" என்று கூறுவது குறிப்பிடத்தக்கது. இவர் நகைச்சுவைப் புலவனாக விளங்கினாலும், வறியவர்களை ஆதரிக்கும் புரவலனாகவும் விளங்கினார். உருசிய நாட்டு அழைப்பின் பேரில் இந்திய அரசினரால் அனுப்பப்பட்ட கலைக்குழுவினருள் இவரையும் இவரின் மனைவியாரையும் அண்மையில் தென்னிந்திய நடிகர் குழுவினர் "பொன்னாடை போர்த்திப் பாராட்டினர். சுருக்கமாகக் கூறுவோமானால் கலையுலகில் வேறெவரும் பிடிக்கமுடியாத ஒரு தனியிடத்தை இவர் தமக்கு வகுத்துக் கொண்டார். இவரால் ஆதரவு பெற்ற குடும்பங்கள் எண்ணிறந்தன.

இங்ஙனம், அனைவர் உள்ளத்திலும் இன்பத் தேனை ஊட்டி வந்த திரு. என். எஸ். கிருட்டினன் அவர்கள் அனைவர் அகத்திலும் துன்பக் கனலை மூட்டிவிட்டு மறைந்து விட்டார். இவர் இவ் அரிய பெரிய பண்புகளோடு வாழ்ந்தமை மட்டுமன்றி ஒரு கலைஞன் எவ்வாறு மாளவேண்டும் என்பதையும் அறிவித்து விட்டுச் சென்றுள்ளார். அவர் இறந்த பொழுது மக்கள் அனைவருங்கூடி அவரது இறுதி நேரத்தில் கற்றுவின் மனம்போலக் கசிந்துருகியமைபோல, இதுவரை எக்கலைஞன் வகையிலும் உருகியதில்லை. "கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்" என்னும் முறையில் கணவனை இழந்து அல்லலுறும் அவரின் மனைவியாருக்கும், "கண்மணியை இழந்தோர்க்குக் காட்டுவதில்" என்று ஏங்கித் தவிக்கும் மக்களுக்கும் யாம் கூறத்தகும் ஆறுதல், அவர் புகழ்வழி நின்று அவர் மரபை நாம் பெருக்க வேண்டும் என்பதேயாகும்.

—செந்தமிழ்ச் செல்வி.

NEONSIGNS
for
ADVERTISING OR DISPLAY SIGNBOARDS
in
RED, BLUE, GOLDEN YELLOW,
GREEN OR WHITE.
Manufactured by
Sethuram Thiagarajan & Co.,
Electrical & Mechanical Engineers & Contractors,
272/73, Angappa Naicken St., MADRAS.-1.
Telegram: "LIVELINE" Telephone: 4636.

சைவ சித்தாந்தச் சொற்பொழிவுகள்

திருப்பனந்தாள் மடத்தின் திட்டத்தின் கீழ்த் திருவாசக மணியின் பேச்சுக்கள்; திருப்பனந்தாள் காசி மடத்தின் தலைவராகிய ஸ்ரீமத் அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் ஏற்படுத்தியுள்ள சித்தாந்தப் பிரசாரத் திட்டத்தின்படி காசிச் சர்வகலாசாலையிலும் அலகாபாத் சர்வகலாசாலையிலும் ஆண்டுக்கொரு புலவர் சென்று ஆங்கிலத்தில் சைவ சித்தாந்தத்தைப் பற்றி மொத்தம் நான்கு சொற்பொழிவுகள் செய்து வருவது மரபு. வித்வான்களைத் தேர்ந்தெடுக்கும் ஸ்தாபனம் அண்ணாமலைச் சர்வ கலாசாலையின் சிண்டிகேட் ஆகும்.

1957-வது ஆண்டின் பேச்சாளராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளவர் திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம், பி. ஏ., பி. எல். ஆவர். இவர் செப்டம்பர் மாதம் 6ந் தேதி யன்று அலகாபாத் சர்வகலாசாலையிலும், 10, 11, 12 தேதிகளில் காசி இந்து சர்வகலாசாலையிலும் முறையே ஆங்கிலத்தில் நான்கு சித்தாந்தச் சொற்பொழிவாற்றி வந்துள்ளார். சமஸ்கிருத இலாகாத் தலைவர் ஸ்ரீ சட்டோபாத்யாயர், அலகபாத் சொற்பொழிவிற்குத் தலைமை வகித்தவர் திருவாசகமணியின் அழகிய ஆங்கிலப் பேச்சைப் பாராட்டியதோடு தமது சர்வகலாசாலையிலும் இனி மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்த ஏற்பாடு செய்யுமாறு திருப்பனந்தாள் மடாதிபதியைக் கேட்டுக்கொண்டார். கூட்டத்திற்கு நூற்றுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் வந்திருந்தனர்.

காசி இந்து சர்வகலாசாலைக் கூட்டங்கள் மூன்றுக்கும் முறையே தலைமை வகித்தவர்கள் காசி தத்துவ சாஸ்திரப் பகுதியின் தலைவர் திரு. பி. எல். ஆத்ரேயா, முன்னாள் தத்துவ சாஸ்திரப் பகுதித் தலைவர் ஆர். கே. மைத்ரா, சர்வகலாசாலை உப அத்யக்ஷகர் திரு. ஜா. அவர்கள். இவர்கள் மூவரும், கூட்டத்திற்கு நாள்தோறும் 151, 200, 250 என்று பெருகிய வண்ணம் வந்து நின்றுகொண்டு கேட்ட மாணவ மாணவிகள் அனைவரும், திருவாசகமணியின் இணையற்ற ஆங்கிலச் சொற்பெருக்கை மிகமிகப் பாராட்டி மகிழ்ந்தனர். தமது எழுத்துப் பிரதியைப் படிக்காமல்' சித்தாந்தத்தைப்பற்றிய முக்கியமான கொள்கைகளைத் திருவாசகமணி வாரி வாரி வீசினார். தமக்கே உரிய அற்புதமான ஆங்கில வாக்கியங்கள் மூலம், இடையிடையே இரட்டுற மொழிதல், நகைச்சுவை, நாடகபாணி, தமிழ்ப் பாட்டுகள் இவற்றையும் சந்தர்ப்

பத்துக்கேற்ப நுழைத்துப் பேசி திருவாசகமணியவர்கள் வந்தவர்கள் பேச்சு முடியும்வரை தம்மை மறந்து கேட்டு மகிழச் செய்துவிட்டார். இதன் விளைவாக அவ்விரண்டு சர்வகலாசாலை மாணவர்களிடையேயும், சித்தாந்தத்தில் என்றும் காணாததோர் ஆர்வம் ஏற்பட்டுள்ளது என்பது எல்லோரும் கண்டதோர் விசேஷம். எல்லாவற்றையும் விட இவரது பேச்சுக்களுக்கு மெருகு தீட்டியதோர் அம்ஸமாவது இவர் ஆங்காங்கே வேதம், உபநிஷத் முதலியவற்றினின்றும் மேற்கோள்களை எடுத்துக்காட்டிச் சென்றமையாகும்.

அலகாபாத்தில் இவர் பேச்சின் தலைப்பு: "சித்தாந்தத்தில் கடவுள்." காசியில் பேசிய மூன்று பேச்சுக்களின் தலைப்பு: "சித்தாந்தத்தில் ஆன்மா" என்பவையாகும்.

திருப்பனந்தாள் மடத்தின் திட்டப்படி காசிச் சர்வகலாசாலையில் சித்தாந்த பேராசிரியராகப் பணிபுரிந்துவரும் திரு. கே. சிவராமன் வந்தனோபசாரம் கூறினார்.

திருப்பனந்தாள் மடத்தின் காசி மடக் காரியஸ்தர் திரு. கலியாணசுந்தரம் பிள்ளையும், ஓய்வுபெற்ற டிபுடி கலெக்டர் சைவத்திரு அரங்கசாமி முதலியார் தம்பதிகளும், ஓய்வுபெற்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரம்மஸ்ரீ கிருஷ்ணய்யர் அவர்களும் இக் காசிக் கூட்டங்களுக்கு வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.



எல்லாவிதமான இங்கிலீஷ் மருந்துகள்

கிடைக்குமிடம் :—

மேயர் & கோ.,

நெ. 16, அய்யா பிள்ளை தெரு,

பார்க்டவுன், **மதராஸ் 3.**

வெளியூர் ஆர்டர்கள் உடனே கவனிக்கப்படும்.

All kinds of English Medicines can be had at

MAYER & COMPANY

16, Iyah Pillai Street, P. T. Madras.–3.

Phone: 4468 Tel: Add.

H. O. Phone: 55863 "AYENYES"

எங்களிடம் தயாராகும் சங்கு, சக்கரம், கடிகாரம், மார்க் துவரம் பருப்புகளும், மான் மார்க் கடலைப் பருப்புகளும், மற்ற பருப்பு வகைகளும் மைதா ரவை பொட்டு மாவு தினுசுகளும், அரிசி வகைகளும், படி எடை உத்திரவாதத்துடனும், மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்பனை செய்கிறோம்.

A. N. சீனிவாசக நாடார் & பிரதர்ஸ்,
103, ஆச்சாரப்பன் தெரு,
சென்னை 1.

H. O. 3, சட்டண்ண நாய்க்கன் தெரு,
ஜுனை, மதராஸ் 7.

செல்வக் குழந்தைகளே !

அன்றாடம் பள்ளிக்கூடம் போகிறீர்களா?

பள்ளிக்கூடம் போகும்பொழுது படிப்பதற்கு வேண்டிய பாடநூல்களையும், குறிப்பேடுகளையும் மறவாது எடுத்துச் செல்லுகிறீர்களா?

உங்கள் நலத்துக்காக ஓயாது உழைத்துவரும் ஆசிரியர்களிடத்தில் அன்புடனும், பணிவுடனும் எப்பொழுதும் நடந்து கொள்ளுகிறீர்களா ?

வகுப்பு நடக்கும் போது வேறு எங்கும் மனதைச் செலுத்தாது கருத்துடன் பாடங்களைக் கற்கின்றீர்களா?

ஆசிரியர் சொல்லுகிற குறிப்புகளைச் செம்மையாக உங்கள் குறிப்பேடுகளில் குறித்துக் கொள்ளுகிறீர்களா?

படிக்கவேண்டிய நேரத்தில் படித்து, விளையாட வேண்டிய நேரத்தில் விளையாடி உங்கள் அறிவையும், உடம்பையும் ஒருங்கே வளர்த்துக் கொள்ளுகிறீர்களா ?

பள்ளியில் படித்த பாடங்களை இல்லத்திலும், திருப்பிப் படித்து அவைகளைத் தெளிந்து கொள்ளுகிறீர்களா ?

உங்கள் அன்னை, தந்தையரிடம் அன்புள்ள, அறிவுள்ள குழந்தைகளாக நடந்து கொள்ளுகிறீர்களா ?

ஒவ்வொருநாளும் யாருக்காவது ஓர் உதவியாவது செய்கின்றீர்களா ?

எல்லாம்வல்ல இறைவனை வணங்குகின்றீர்களா?

இவ்வளவும் செய்துவரும் நீங்கள் நல்ல குழந்தைகள். நீங்கள் மேன்மேலும் சிறந்து விளங்க எல்லாம்வல்ல, முழுமுதற் கடவுளை வேண்டுகிறோம்.

தண்ணீர் சப்ளை விஷயமாக உங்கள் தேவை எதுவானாலும் சரி,
அதற்கென்றே டெமிங் பம்புகள் உள்ளன.



- வீடு, தொழிற்சாலை, ஹோட்டல், ஆஸ்பத்திரி அல்லது கிராம தண்ணீர் தேவைகளுக்கு சுபகரமான உழைப்புடன் நயமான விலையில் பம்பு செட்டுகள் உள்ளன.
- கைவசம் உள்ள ஸ்டாக்கிலிருந்தும், வந்துகொண்டிருக்கும் ஸ்டாக்கிலிருந்தும் எந்த மாடல்களையும் விரைவில் சப்ளை செய்யமுடியும்.
- ஸ்பேர் சாமான்களுக்கு நீங்கள் கவலைப்படவேண்டியதே இல்லை: அவை எப்பொழுதும் கிடைக்கும்.
- எங்கள் பொறுப்பு, சப்ளை செய்த பம்புகளை பொருத்துவதுடன் நின்றுவிடுவதில்லை, உள்ளூரானாலும் சரி, வெளியூரானாலும் சரி, பம்புகளை அவ்வப்போது சரிபார்த்து ஓடச்செய்வதும் எங்கள் பொறுப்பே. இதற்குவேண்டிய எல்லா வசதிகளும் எங்களிடம் உண்டு.
- ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்து நேரில் எல்லா பம்பு செட்டுகளையும் பார்க்கவும். டெமிங் பம்புகளைப்பற்றிய ஆலோசனை எப்பொழுதும் எங்களிடம் எளிதில் கிடைக்கும்.

தண்ணீர் சப்ளை விஷயங்களை சுலபமாக தீர்த்துவைக்கக்கூடிய நிபுணர்கள்.

ஈஸன் என்ஜினியரிங் கம்பெனி லிமிடெட்.

5-7 செகண்ட் லேன் பீச், மதராஸ்.

137406

Post Box No. 530 Tel: No. 3181

S. KUPPUSAWMY & Co.,

(THE POPULAR SPIRIT STORES)

15, Venkatachala Mudali Street, P.T., Madras-3.

Telegraph Address: "VINEGAR"

WHOLESALE AND RETAIL IN THE FOLLOWING

Denatured Spirit

Varnish or French Polish Shelloc Varnish	Aeroplane Brand, Cow Brand, S. K. Brand
Phenyle	Bulldog Brand, Lion Brand, British Home Brand
Table Vinegar	Cow Brand, Parrot Brand
Castor Oil (Cold-drawn	Mother & Baby Brand
Distilled Water	S. K. & Co.,
Acid Distilled Water	Motor Brand
Omum Water	Butterfly Brand

and also all kinds of paints.

Head Office: at MADRAS

Branches:

6, Kalaspalayam, Bangalore City,

19/43, Pattabiramiah Lane, Governerpet

Vijayawada

and

168, Long Bazaar, Vellore.